**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4642

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 21.10.2021

Accepted: 06.12.2021

Published: 01.01.2022

Citation:
Yuvarani, E. "Valluvan Kattum Thalaivan Ullam." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 164–70.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4642

*Corresponding Author:
uvaranie@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Valluvan Kattum Thalaivan Ullam

**Dr. E. Yuvarani**
*Associate ProfessorC Tamil Department*
*PKR Women's Arts CollegeC Gobichettipalayam, Tamil Nadu, India*
http://orcid.org/0000-0002-4269-9791

**Abstract -** The tradition is that the leader must have all the qualifications. There is a leader who shows the cultivator accordingly. This article is aimed at examining how Valluvar has expressed his feelings for the leader during the period of Kalavu.

**Keywords:** Tamil Literature, Thirukural, Ethical Literature, Valluvar, Kalavu, Qualifications, Tolkappiyar, Mental Consciousness

**References**

1. Tolkappiyam, Meipattiyal, No-25.
2. Tolkappiyam, Kalaviyal, No-2.
3. Kalithogai, P-18.3.
4. Srinivasan, P., Thol. Porul, P.14.
5. Kambaramayanam, Mithilai Katchi, P.15.

# வள்ளுவன் காட்டும் தலைவன் உள்ளம்

*முனைவர் ஈ. யுவராணி*
இணைப் பேராசிரியர், தமிழ்த் துறை
பி.கே.ஆர்.மகளிர் கலைக் கல்லூரி
கோபிசெட்டிபாளையம்

***ஆய்வுச் சுருக்கம்***

*தலைவன் என்பவன் எல்லாத் தகுதிகளும் உடையவனாக இருத்தல் வேண்டும் என்பது மரபு. அதற்கேற்றாற்போல் வள்ளுவர் காட்டும் தலைவன் இருக்கிறான். வள்ளுவர் களவுக் காலத்தில் தலைவனின் உள்ள உணர்வு எப்படி இருக்கிறது என்று கூறியுள்ளார் என்பதை ஆராயும் நோக்கோடு இக்கட்டுரை அமைகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழிலக்கியம், அற இலக்கியம், திருக்குறள், வள்ளுவர், களவு, பண்புகள், தொல்காப்பியர், மன உணர்வு*

களவுக் காலத்தில் தலைவனுக்கு இருக்க வேண்டிய பண்புகள் எவை என எடுத்துக் கூறி அவ்வகையான பண்புகள் தலைவனுக்கு இருக்கிறது என்பதைத் தொல்காப்பியர் வழி நின்று வள்ளுவர் கூறுகிறார்.

## தலைவனின் பொதுவான பண்பு

**“பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு**
**உருவு நிறுத்தக் காம**
**வாயில் நிறையே அருளே**
**உணர்வொடு திருவென**
**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையை”[1]**

தலைவன் பிறப்பு, குடிநிலை, ஆண்மை, ஆண்டு உருவம், அன்பு, மன அடக்கம், பரிவுணர்வு, அறிவு, செல்வம் ஆகியவற்றால் தலைவியோடு ஒத்திருக்க வேண்டும். அவ்வாறு இருப்பின் சிறப்பு என்று கருதப்படுகிறது. இப்பண்புகளில் சில தலைவனிடம் மட்டும் இருந்து தலைவியிடம் இல்லாவிட்டால் ஏற்கத்தக்கதே என்பதை,

**“மிக்கோன் ஆயினும் கடி வரை இன்றே”[2]**
என்கிறார் தொல்காப்பியர்

தொல்காப்பியர் சுட்டும் தலைவன் சிறப்புடைய பண்புகளைப் பெற்றவனாக இருக்க வேண்டும். அவன் பெருமையும், உள்ளம் உறுதி உடையவனாக இருக்கவேண்டும் என்று தெரிய வருகிறது.

**“பெருமையும் உரனும் ஆடூஉ மேன”[3]**
என்று கூறுகின்றார்.

ஆயிரம் செல்வம் இருந்தாலும் நல்ல பண்புகள் பெறாவிட்டால் அவர் புகழ் நிலையை அடைய மாட்டார் என்பது உறுதி. இதையே திருவள்ளுவர் குறளில் கூறியுள்ளார்.

**“பண்புடையார் பட்டுண்டு உலகம் அது**
**இன்றேல்**
**மண்புக்கு மாய்வது மனசுசு (குறள்-996)**

## கலித்தொகையில்

**“பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்”4**
என ஆசிரியர்கள் பண்பிற்கு விளக்கம் தந்துள்ளனர்.

## களவுக் காலத்தில் தலைவனின் மன உணர்வு

களவுக் காலத்தில்தான் தலைவனின் மன உணர்வு அலை பாய்கிறது. கடலைப்போல

ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கும் இளமை வேகத்தில் துடிப்பில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற நோக்கில் ஏதாவது ஒரு செயலில் மனம் ஈடுபடத் துடிப்பது இயற்கையே. தலைவனின் மன உணர்வு களவுக் காலத்தில் என்னென்ன மன நிலையில் இருக்கும் என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கிறார் வள்ளுவர்.

களவுக் காலத்தில் தலைவனின் மன உணர்வுகள் பெரும்பாலும் பாலுணர்வை அடிப்படையாகக்கொண்டு அமைகின்றன. மனித மனம் சூழ்நிலைக்கு ஏற்றார்போல் மாறும்தன்மை கொண்டது. திருக்குறள் காமத்துப்பாலில் களவுக் காலத்தில் தலைவனின் மன உணர்வுகள் தெளிவாகக் காட்டப்படுகின்றன. மனிதன் தன் மனத்தால் நினைத்து பார்க்க முடிவு செய்தபின் தான் எதையும் செய்யத் துணிகிறான். மணவாழ்க்கை மட்டும் அவன் சுய சிந்தனையில் எடுத்துக் கொள்கிறான். இளவயது ஆற்றலும் உடைய இளைஞன் ஒருவனுடைய உள்ளத்தில் பருவ முதிர்ச்சியில் ஆசைகளை வளர்த்து தனக்குத் தகுந்த துணைவி ஒருத்தியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு காம இன்பம் நுகர வேண்டும் என்ற ஆசை தலை தூக்கி நிற்கிறது. இந்த ஆசை ஆண்மகனுக்கு மாத்திரமே உரியது அன்று. இளமங்கையரின் உள்ளத்திலும் பருவ முதிர்ச்சியில் இன்ப வேட்கை தலைதூக்கி நிற்கிறது.

## ஐயம் தோன்றல்

முதன்முதலில் ஒரு பொருளைப் பார்க்கும் பொழுது இயல்பாகவே ஐயம் ஏற்படும். அவ்வாறு வள்ளுவர் காட்டும் தலைவன் ஐயுறுகிறான். தலைவன் ஐயுறலாம். தலைவி ஐயுற்றால் அவளிடம் அச்ச உணர்வு தோன்றக் காமக்குறிப்பு நிகழாமல் போய்விடும் என்கிறார் நச்சினார்கினியர். தலைவனுக்கு ஐயம் தோன்றுவது சிறப்பு.

இடைக்காலத்தில் தோன்றிய பெரிய புராணத்தில் பரவையார் சுந்தரரைப் பார்த்து ஐயமுருவதாகச் சேக்கிழார் கூறுகிறார். “முன்னே வந்து எதிர் தோன்றும் முருகனோ”[5] முதன்முதலாகப் பெண்ணைப் பார்த்து இளைஞன் என்ன நினைக்கிறான் இத்தகைய அழகு மடந்தை இந்த பூவுலகில் வசிப்பவர் தானா அல்லது தேவமகள் இவருடைய ச ாயல் மயில் முறை இதுபோலவே இருக்கிறதே பெண்ணுறுப்பில் வந்த மயில்தான் அவள் இல்லை. இங்கு இதனால் யாரிவள் இத்தகையவளை இதற்கு முன் நான் பார்த்ததே இல்லையே என்று கூறுகிறான்.

காதல் உணர்ச்சியைத் தன்னைவிட அவள் சிறந்தவள் தன்னால் அடையப்பட முடியாதவள் அபூர்வமானவள் என்ற எண்ணத்தைத்தான் காதலன் மனதில் உண்டாக்குகிறது. ஒருவருக்கு ஒருவர் எவ்வளவு சிறந்தவராக மேம்பாடு உடையவராகவும் தோன்றச் செய்கிறது.

**“அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
**மாதர்கொல் மாலும்என் நெஞ்சு குறல்”**
***(குறள் - 1091)***

என்று கூறுவதற்குக் காரணமாயிருக்கிறது. கனங்குழை கனத்த காதணியை உடைய பெண் காதில் கனமான ஆபரணத்தை அணிந்த பெண்கட்கு சிறப்பும் எனப் பண்டைய காலத்தில் கருதப்பட்டதாகத் தெரிகிறது. இன்றும் திருநெல்வேலி மாவட்ட பண்டைத் தமிழர் அணியும் கனங்குழையை நினைவுகூர்தல் வேண்டும்.

**ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்**
**நண்ணாரும் உட்கும் பீடு (குறள் - 1088)**

பெண்களின் அழகுக்கு அழகு சேர்ப்பது அவர்களின் கண்கள். அதுவும் மான் போன்ற மருண்ட பார்வையைப் பெற்றவர்களின் கண்கள் காண்பதற்கே தனி அழகு. அப்படிப்பட்ட இயற்கை அழகு வாய்ந்த பெண்ணை எதற்குச் செயற்கையாக அணிகலன்களை அணிவிக்கச் செய்கிறார்கள். அதற்கு அவசியமே கிடையாது என்று கூறுகின்றார். கடைசியாக தன் மனதில்

உண்டாகிவிட்ட காம உணர்ச்சியை பற்றி நினைக்கும்போது அவன் உள்ளத்தில் உவகை பூரிக்கிறதுக் காய்ச்சி வடித்தெடுத்த மது அதனை உண்டவர்க்குத்தான் மகிழ்ச்சியை ஏற்படுத்தும். ஆனால் காதலோ காதலியைப் பார்த்த உடன் அளவு கடந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

**உண்டார்கண் அல்லது அடுறறாக் காமம்போல்**
**கண்டார் மகிழ்செய்தல் இன்று**
**(குறள் – 1090)**

மதுவைவிட அதிக மயக்கம் தருவது காதல். மதுவின் மயக்கம் சிறிது நேரம் இருந்து பின்னர் மாறும். ஆனால் காதல் மயக்கமோ அப்படியில்லை. மதுவைவிடக் காதல் கொடியது. கள் உணவாக உள்நுழைந்து மயங்கி செய்வது. காதல் "கண் வழி நுழைந்தும் ஓர்கள்வனோ"[6] மயங்கி செய்வது என்று கூறப்பட்டுள்ளது

**குறிப்பால் உணரும் மன உணர்வு**

குறிப்பறிதல் என்பது பேச்சின்றி முகக்குறியாலும் கண்ணாலும் செயலாலும் அறியும் மனோதத்துவ நிகழ்ச்சியறிதலாம். தலைவன் தலைவியின் உள்ளக் குறிப்பினைத் தோழனும், தோழியும் அறிதலும், தலைவன், தலைவியின் குறிப்பினை அவரவர் அறிவாது மாகிய உண்மையினைக்கூறி இந்த உலகியலில் ஒருவருக்கொருவர் முகக் குறிப்பால் அறியும் முறையினையும் அறிய முடிகிறது.

**இருநோக்கு இவள்ண்கண் உள்ளது ஒருநோக்கு**
**நோய்நோக்கொன் றந்நோய் மருந்து**
**(குறள் – 1091)**

இவர் யாரோ என்று அறியாது பார்ப்பது பொதுப் பார்வையாகும். அந்தப் பார்வை தலைமகனுக்குத் துன்பத்தைக் கொடுக்கிறது. ஆனால் அன்பு கலந்து பார்க்கும் பார்வை சிறப்புப் பார்வையாகும். அப்பொழுது அது மன அமைதி பெற்று இன்பத்தைக் கொடுக்கிறது தலைமகளின் கண்களில் இரண்டுவிதமான பார்வை உள்ளது என்று குறிப்பினால் உணர்கிறான். எனவே கண்ணால் விருப்பு வெறுப்புக் காட்ட முடியும் என்ற உண்மையை உணர்த்தினார். ஆகையால் முகம் என்பது உள்ளத்தைக் காட்டும் கண்ணாடி என்று கூறுவதுண்டு. உள்ளத்தில் நிகழும் மன உணர்வு முகத்தின் வாயிலாக வெளிப்பட்டுவிடும் என்பது கருத்து.

**கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்**
**செம்பகம் அன்று பெரிது. (குறள் – 1092)**

அவளது உடன்பட்ட பார்வை ஏங்கி நின்ற தலைமகனுக்கு முழு ஆறுதலையும் கொடுத்துவிடுகிறது. காதலால் பீடிக்கப்பட்டுத் தலைமகளின் எண்ணத்தை அறிய முடியாதபடி தடுமாறி இருந்த தலைமகன் அல்லது உடன்பட்ட பார்வையைக் கண்டதும் உள்ளக் கருத்தை உணர்ந்து கொண்டான்.

தலைவன் தனக்கு உரியவனாகத் தலைவி கண்டதைத் தலைமகன் அறியாத நிலையினைத்தான் களவு கொண்டது என்றார். களவு கொள்ளுதல்லாவது தன்னையறியாமலே தான் உள்ளே நுழைந்து உரியனாதல். சிறு நோக்கமாவது கடைக்கண்ணால் சிறுகப் பார்த்து குறிப்புணர்த்தலும் குறிப்புரைத்தலும் பார்வையிற் சிறுமை இன்பத்தின் மிகுதியைக் கொடுத்தால் செம்பாகம் அன்று பெரிது என்று கூறுகிறார் வள்ளுவர். உடன்பட்டாள் என்ற குறிப்பே இன்ப நுகர்ச்சிக்கு ஒத்தது ஆயிற்று.

பெண்கள் இயற்கையாகவே நாணம் உடையவர்கள். எனவே அவர்கள் எந்தச் செயலிலும் நாணப்படுவது தவிர்க்க முடியாது. அவள் என்னைப் பார்த்து நாணித் தலை குனிந்தாள் அது எங்கள் காதல் பயிரை வளர்ப்பதற்கு நீரைப் பாய்ச்சுவது போன்றதாகும்.

**“நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்**
**யாப்பினு ளட்டிய நீர் தலை”**

***(குறள் - 1093)***

குனிந்து பார்த்தால் தலைமகளின் உடன்பாடு அறியக்கிடக்கிறது. தலைவனைக் கண்டதும் நாணத்தினால் தலைகுனிந்து இருக்கும்போது தலைவனைப் பற்றிய எண்ணம் அவளிடையே வளர வாய்ப்பு உருவாகிறது. தலைவன் தலைவியைப் பார்க்கும்போது அவள் தலை கவிழ்ந்து நிலத்தை பார்க்கிறாள். ஆனால் பார்க்காதபோது அவள் தலைவனைப் பார்த்துப் புன்முறுவல் அடைகிறாள்.

**“யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்**
**தான்நோக்கி மெல்ல நகும”**

***(குறள் - 1094)***

தலைவி நாணம் என்ற கட்டுப்பாட்டில் இருப்பவள். ஆகையால் தலைமகன் பார்க்காதவனைப் போல் பாசாங்கு செய்யும் போது உள்ளத்து எழும் காதல் வேட்கையால் தான் கண்டு மகிழ்கிறாள். நிலன் நோக்கல், விரலால் கிண்டுதல் முதலியன பெண்களின் உள்ளக் கிளர்ச்சியையும் நாணத்தின் செயலையும் குறிப்பன. மெல்ல நகும் என்பது மன அடக்கத்தால் மகிழ்ச்சிக் குறிப்பை வெளிப்படுத்துதல் ஆகும்.

தலைவனை நேரடியாக நாணத்தால் காணமுடியாத தலைவி, கடைக்கண்ணால் பார்க்கிறாள். காதலன் அழகைக் கண்டு ஆனந்தம் அடைகிறாள். ஏனெனில் வெளிப்படையாகக் காட்ட முடியாத களவு எண்ணம் கொண்டவளல்லவா பெண்!

**“குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்**
**சிறக்கணித்தாள் போல நகும்”**

***(குறள் - 1095)***

தலைவியின் புன்முறுவல் எனக்கு அவளுடன் உடன்பாட்டை உறுதி செய்கிறது எனக் குறிப்பிடுகிறான் தலைவன். முன்பின் அறியாதவரை போலச் சந்தித்தபோது பகைமையோ, நட்போ இன்றிப் பொதுவாகப் பார்ப்பது உள்ளதால் பிணைக்கப்பட்ட காதலர்களிடையே தான் காணப்படும் உயர்ந்த பண்பாகும்.

**“ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக் குதல்**
**காதலர் கண்ணே உள”**

***(குறள் - 1099)***

உள்ளத்தில் ஒருவரையொருவர் நேசப் பார்வைகளானால் வெளித் தோற்றத்திலும் நேசிக்க வேண்டும் என்பதில்லை. நெருங்கிய தொடர்பைச் சந்தித்த காலத்து வெளிப்படையாகக் காட்டாது போனாலும் உள்ளத்தில் இருக்கும் தொடர்பு கெடாது, காதலருடன் மட்டுமல்லாமல் நண்பர்களிடத்தும் காணும்போது உண் மையாகும். ஒருவர் கண்ணோடு மற்றொருவர் கண் ஒத்துத் தங்கள் மன ஒற்றுமையை உணர்த்தி விடும்போது வாயினால் பேசும் பேச்சு ஏன்? அவை பயனற்றவை ஆகும்.

**“கண்ணோடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்**
**என்ன பயனும் இல”**

***(குறள் - 1100)***

உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களைக் கண் வெளிப்படுத்தும். இருவர் கண்களும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து அன்பை வெளிப்படுத்திவிட்டால் வாய்ச்சொற்கள் தேவையில்லை. மனத்திலே ஒற்றுமை இல்லாத வாயினால் மட்டும் இனிக்கப் பேசுவது எவ்வளவு தீமையை உண்டாக்கும்? உள்ளக் குறிப்பைக் கண் காட்டி விடும் என்பதும் சொற்கள் பகைமையும் என்பதை குறிப்பினால் தலைவன் உணர்த்து கொள்கிறான். எனவே கண்ணிற் சிறந்த உறுப்பில்லை என்பது உண்மை.

**புணர்ச்சியால் உண்டாகும் மன உணர்வு**

கூடுதலினால் உண்டான இன்பத்தை நினைத்து மகிழ்ந்து உரைத்தல் புணர்ச்சி மகிழ்தலாகும். புலன்களின் அனுபவத்தால் அடைவதே இன்பம். உலகத்தில் ஐம்புலன்களுக்கும் ஒரே சமயத்தில் இன்பமளிக்கும் ஒரே பொருள் பெண் தான். பழந்தமிழர் சமுதாயத்தில் காதல் கொண்ட இருவர் முதன்முதலாகக் களவு மூலமாகத்தான் தங்கள் இதய வேட்கையைத் தீர்த்துக்கொண்டனர். இந்தக் காதலர்கள் தாம் பெற்ற காதல் இன்பத்தில் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பர் என்பது கூறவும் வேண்டுமோ? அந்தக் காதலன் நினைக்கிறான் சில பொருட்கள் காட்சிக்கினியவாய் உள்ளன. அவற்றைப் பார்த்ததும் உள்ளம் பரவசம் அடைய முடியும். சிலவற்றை முகர்வதால் மாத்திரமே இன்பம் அடைய முடியும். அவற்றைப் பார்த்தோ சுவைத்து இன்பம் அடைய முடியாது. சுவைமிக்க உணவு, மருந்து முதலியவற்றைச் சுவைப்பதால் மட்டுமே இன்பம் அடைய முடியும். அவற்றை வைத்து பார்த்துக் கொண்டிருப்பதாலோ முகர்ந்து கொண்டிருப்பதாலோ பயனடைய முடியாது. ஆனால் வள்ளுவர் கூறும் தலைவனுக்குக் காதலியைப் பார்த்தவுடன் இன்ப உணர்ச்சி உண்டாகுகிறது. அவள் குரலின் இனிமை அவன் உணர்வலைகளிலே சென்று ரீங்காரம் இடுகிறது. அவளைத் தொட்ட உடனே கிட்டும் இன்பம் மெய்மறக்கச் செய்கிறது. அவள் கன்னத்தை நெற்றியை உச்சியை முகர்வதால் உண்டாகும் இன்பமோ மோகன ராகம் பாடச்செய்கிறது. காதல் பெருக்கில் அவளது கனி இதழைச் சுவைக்கின்ற இன்பம் இருக்கிறதே அதற்கு இணையாக வேறு எதையுமே சொல்ல முடியாது என்கிறார் வள்ளுவர்.

> **"கண்ணுகேட்டு உண்டுஉயிர்த்து**
> **உற்றுஅறியும் ஐம்புலனும்**
> **ஒண்டொடி கண்ணே உள"**
>
> ***(குறள் - 1101)***

கண்ணினால் பார்ப்பதும், காதால் கேட்பதும், நாக்கினால் சுவைப்பதும், மூக்கினால் நுகர்வதும், வருவதும் உடலினால் தொட்டு உணர்வதும் ஆகிய ஐம்புலன்களின் இன்பமும் பெண்ணிடம் தாம் உள்ளன.

காதல் இன்பத்தை அனுபவித்த காதலன் செந்தாமரை போன்ற கண்களை உடைய திருமால் வாழும் வைகுண்ட இன்பத்தைவிடத் தன்னால் விரும்பப்படும் பெண்ணினால் கிட்டும் இன்பமே சிறந்தது எனக் கூறுகிறான்.

> **"தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்**
> **தாமரைக் கண்ணான் உலகு"**
>
> ***(குறள் - 1103)***

உலகத்தில் சிறந்ததாய்க் கருதப்படும் இன்பம் தலைவன் நேசிக்கும் பெண்ணிடம்தான் கிடைக்கிறது ஆதலால் இந்த இன்பதின் உயர்ந்தது என்று எண்ணி மகிழ்கிறான். இன்பம் என்பது மனப்பாகுபாட்டினைப் பொறுத்தது என்று தெரிந்துகொள்ளவேண்டும் காதலியுடன் கொஞ்சிக் கொண்டிருக்கையில் பொய்யாகத்தான் அவளிடம் கோபித்துக் கொள்வதும் அவள் தன்னிடம் கோபித்துக் கொள்வதும் பின்பு ஒருவரை ஒருவர் தம்முள் கோபம் தணிக்க முயல்வதும் பின்பு முன்பைவிடப் பன்மடங்கு ஆர்வத்துடன் காற்றுப் புக முடியாதபடி இறுக அணைத்துக் கொள்வதும் காதல் கொண்டவர்களின் இயல்பு.

> **"ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்**
> **கூடியார் பெற்ற பயன்"**
>
> ***(குறள் - 1109)***

வாழ்க்கையானது இன்பமும் துன்பமும் நிறைந்தது. துன்பம் நிகழும்போது தான் இன்பத்தின் பெருமையை உணர முடியும். இருள் இருந்தால் தான் வெளிச்சத்தின் பெருமை தெரிவதுபோல, காதல் இன்பத்தை முழுவதும் பெறுவதற்குச் சிறு கோபமும் அவசியம்.

எனவே ஊடல் என்பது காதலென்ற பயிருக்கு நீர்விட்டு வளர்ப்பது போன்றதாகும்.

பல நூல்கள் கற்கக்கற்க அறிவு வளர்ச்சிபெறும். அதுபோலவே பெண் இன்பமானது அனுபவிக்கும்தோறும், புதிய உணர்ச்சிகளைத் தந்து தெவிட்டாத இன்பத்தைக் கொடுக்கிறது. இதற்கு எல்லை கிடையாது.

**"அறிவுதோறும் அறியாமை கண்டற்றால் காமம்**
**செறிதோறும் சேயிழை மாட்டு"**

***(குறள்- 1110)***

## முடிவுரை

காதலும் காமமும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை. ஒரு மனிதனுக்கு உணவும், நீரும் எவ்வளவு முக்கியமானதோ அதுபோலவே காதலும் காமமும் தேவையானவை என்று உளவியலார் கூறுவதன்படி வள்ளுவர் காட்டும் தலைவனின் உள்ளம் அமைந்திருக்கிறது.

## குறிப்புகள்

1. தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல் நூ-25
2. தொல்காப்பியம்,களவியல் நூ -2
3. மேலது நூ -7
4. கலித்தொகை பா-18.3
5. ப.சீனிவாசன் , தொல்,பொருள் ப.14
6. கம்பராமாயணம் மிதிலைக் காட்சி,ப-15